செ.வெ.எண். 8 நாள். 10.11.2011

**நாமக்கல் மாவட்ட ஆட்சியரக கருத்தரங்க கூடத்தில் மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு.ப.தனபால் அவர்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தின்கீழ் 1250 நபர்களுக்கு ரூ.4.47 கோடி மதிப்பிலான நிதியுதவிகளையும், திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ் 1250 நபர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் வீதம் 5 கிலோ தங்கத்தினை வழங்கினார்.**

மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு.ப.தனபால் அவர்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி மற்றும் திருமாங்கல்யத்திற்கு தங்கம் ஆகியவைகளை வழங்கி பேசியதாவது: தற்போது தங்கம் விலை ஏறினாலும், திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்கம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்படுகிறது. சமுதாயத்தில் அடித்தள மக்களுக்கு திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கிடும் திட்டம் மிகவும் உதவிகரமாக உள்ளது. இந்தியாவில் இத்திட்டம் எந்த மாநிலத்திலும் இல்லை. மேலும் உலக நாடுகளிலும் இதுபோன்ற திட்டங்கள் இல்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் கூறிய அனைத்தையும் தற்போது திட்டங்களாக செயல்படுத்தி வருகிறார். ஆட்சிப்பொறுப்பேற்ற 5 மாத காலத்திற்குள் அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் திட்டங்கள் அனைத்தும் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழை எளிய மக்களுக்கு விலையில்லா அரிசி, விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவைகள் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின் மூலம் ஏழைகள் வாழ்வில் ஏற்றம் பெறுகின்றனர். அரசின் திட்டங்களைப் பெற்று பொதுமக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

விழாவிற்கு தலைமை வகித்த மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது: இன்றைய தினம் ஒரு சவரன் தங்கம் ரூ. 22,000 –த்திற்கு விற்கக்கூடிய சூழ்நிலையில் அரசின் சார்பில் ஏழை எளியவர்களின் திருமண சுமையை குறைக்கும் பொருட்டு திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. மேலும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தின்கீழ் பட்டம் மற்றும் பட்டயப்படிப்பு படித்தவர்களுக்கு திருமண நிதியுதவியாக ரூ.50,000 மற்றும் 4 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு திருமண நிதியுதவியாக ரூ.25,000 மற்றும் 4 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தகுதியுடைய அனைவரும் விண்ணப்பித்து திருமண நிதியுதவியை பெற்றுக் கொள்ளலாம்.

விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் அவர்கள் 541 நபர்களுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தின்கீழ் தலா ரூ.50,000-த்திற்கான காசோலை என மொத்தம் ரூ.2,70,50,000 –த்திற்கான காசோலைகள் மற்றும் தலா 4 கிராம் தங்கம் வீதம் 2164 கிராம் தங்கம், 709 நபர்களுக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ. 1,77,25,000-த்திற்கான காசோலைகள் மற்றும் தலா 4 கிராம் தங்கம் வீதம் 2836 கிராம் தங்கம் என மொத்தம் 1250 நபர்களுக்கு ரூ. 4,47,75,000 –த்திற்கான காசோலைகள் தலா 4 கிராம் தங்கம் வீதம் 5 கிலோ தங்கத்தினையும் வழங்கினார்.

விழாவில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.பாஸ்கர், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.கே.காந்திமுருகேசன், மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் திரு.ஏ.பி.பழனிவேலு, நாமக்கல் நகர்மன்றத் தலைவர் திரு.இரா.கரிகாலன், நாமக்கல் ஒன்றியக்குழு தலைவர் திருமதி.மு.கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.அறிவழகன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ஆர்.சாந்தா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.